

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.12.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, திருச்சிராப்பள்ளி எஸ்.கண்ணனூர் பேரூராட்சி, சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில் திருமண மண்டபத்தில் மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமை தொடங்கி வைத்து, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று, முகாமை பார்வையிட்டார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ந.தியாகராஜன், சி.கதிரவன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் க.வைரமணி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் காளியப்பன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## குடியிருப்புகளில் சூழ்ந்த வெள்ள நீரும் வடியத் தொடங்கியது!

# தென் மாவட்டங்களில் மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பினர்!

## அமைச்சர்கள் - கனிமொழி கருணாநிதி எம்.பி. நிவாரண உதவிகள் வழங்கினர்!

திருநெல்வேலி, டிச. 21 –

நெல்லை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து 30 ஆயிரம் கன அடிக்கு மேல் உபரி நீர் திறந்துவிடப்பட்டது. காட்டாற்று வெள்ளத்தின் காரணமாக தாமிரபரணி ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், தாழ்வானப் பகுதிகளில் குடியிருப்புகளுக்குள் தண்ணீர் புகுந்து மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன், பல்வேறு இடங்களில் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டது.

இந்த நிலையில் குமரி கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுநிலை ஆழ்கடல் நோக்கி நகரத் தொடங்கியதால், நெல்லையில் நேற்று பிற்பகல் முதல் மழை படிப்படியாக குறைய தொடங்கியது. இதுபோன்று மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளிலும் மழை குறைந்ததன் காரணமாக பாபநாசம், சேர்வலாறு ஆகிய அணைகளில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீரின் அளவு கணிசமாக குறைக்கப்பட்டு சுமார் 7,000 முதல் 10 ஆயிரம் கனஅடி வரையே வெளியேற்றப்பட்டு வருகிறது. இதன் காரணமாக கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட தாமிரபரணி ஆற்றில், நேற்று முன்தினம் இரவு முதல் தண்ணீர் குறைய தொடங்கியது. நேற்று காலை சுமார் 10 அடி உயரத்திற்கு வெள்ளநீர் குறைந்து தாமிரபரணி ஆறு இயல்பு நிலைக்கு திரும்பி வருகிறது.

**தூத்துக்குடியில் கனிமொழி கருணாநிதி எம்.பி. நிவாரணம் வழங்கினார்!**

வரலாறு காணாத அளவில் கொட்டித் தீர்த்த கனமழையால், பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடியில், மக்களை மீட்கவும், அவர்களுக்கு அவசர உதவிகளை வழங்கும் பணியில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

குறிப்பாக இத்தொகுதியின் எம்.பி. கனிமொழி கருணாநிதி பம்பரமாக சுழன்று நிவாரண பணிகளை மேற்கொண்டு வருகிறார். இந்த நிலையில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை மேற்கொள்வது குறித்து ஆலோசனைக் கூட்டம், தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன், மாவட்ட ஆட்சியர் லட்சுமிபதி, மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் வெள்ள பாதிப்புகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் ஆய்வு செய்தார்.

பொதுமக்களை சந்தித்து அவர்களுக்கு தேவையான நிவாரணப் பொருட்களை கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கி னார்.

## தே.மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# கிருஷ்ணகிரியில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்டம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார்!

*கிருஷ்ணகிரி, டிச. 21-*

கிருஷ்ணகிரி நகராட்சி, மீனாட்சி மஹாலில், “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு அவர்கள், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து, துறை வாரியாக அரங்குகள் அமைத்து பொதுமக்களிடம் மனுக்களை பெற்று கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை பார்வையிட்டார்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48, நான் முதல்வன் போன்ற திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு சேர்வதை உறுதிசெய்திட மாவட்டந்தோறும் “கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரடி களஆய்வு செய்தார்.

இதனை இன்னும் செம்மைப்படுத்திட பொதுமக்களின் தேவைகளும் அரசின் சேவைகளும் ஒரு குடையின்கீழ் சந்தித்து விரைவில் தீர்வுகள் கிடைக்கும் வகையிலும், ஏராளமான அரசு சேவைகள் அரசு அலுவலங்களை நாடிச்சென்று பெறுவதை தவிர்த்து அவர்களின் இல்லத்திலிருந்தே இணைய வழி மூலமாகவே விண்ணப்பிக்கும் வகையில் பல்வேறு சேவைகளை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. விளிம்புநிலை மக்கள் மற்றும் விழிப்புணர்வு இல்லாத மக்கள், சேவைகளுக்கான இணைக்கபபட வேண்டிய சான்றாவணங்கள் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லாத நிலையில் உள்ளோருக்கு உதவிடும் வகையிலும், அரசு சேவைகளை எளிதாக்கி அவர்களின் இருப்பிடத்திற்கே எடுத்துச் சென்று குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் வழங்கிடும் வகையில் “மக்களுடன் முதல்வர்” திட்டம் செயல்படுத்தப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று கோவை மாவட்டம், ஆவாரம்பாளையம், எஸ்.என்.ஆர். கல்லூரியில், “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை துவக்கி வைத்துள்ளார்கள். தொடர்ந்து, நமது கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், “மக்களுடன் முதல்வர்” திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி நகராட்சியில் 28, 29, 30, 31, 32, 33 ஆகிய வார்டுகளுக்குட்பட்ட பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டம் நமது மாவட்டத்தில், ஒசூர் மாநகராட்சி, கிருஷ்ணகிரி நகராட்சி, 6 பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியம் ஆகிய இடங்களில் ஒன்பது நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 05.00 மணி வரை நடைபெற உள்ளது. இம்முகாம்களில் வழங்கப்படும் மனுக்களுக்கு 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

இத்திட்டத்தினால், மக்களுக்கான சேவைகள் அவர்களுக்கு அருகாமையில் வழங்குவது, தேவையற்ற அலைக்கழிப்புகளை தவிர்த்தல், குறிப்பாக விளிம்பு நிலை மக்கள் மாற்றுத்திறனாளிகள் வயது முதிர்ந்தோர்களுக்கு அவர்களைத்தேடி அரசு சேவைகளை வழங்குவது இதன் நோக்கமாகும்.

எனவே, பொதுமக்கள் தங்கள் பகுதியில் நடைபெறும் முகாம்களில் கலந்து கொண்டு தங்களது கோரிக்கை மனுக்களை சமர்ப்பித்து பயனடையலாம் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

பின்னர் கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் 26 பயனாளிகளுக்கு ரூ.25 இலட்சத்து 40 ஆயிரத்து 694 மதிப்பில் திருமண நிதி உதவிகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், வருவாய் கோட்டாட்சியர் பாபு, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி.மணி மேகலை நாகராஜ், நகர மன்ற தலைவர் .பரிதா நவாப், நகரமன்ற துணைத் தலைவர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் , மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்கடேசன் , மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி , சந்திரன் பொருளாளர் கதிரவன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செந்தில் பிரபாகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம் , நாகராசன், பாலன், கோதண்டன் , சித்ரா சந்திரசேகர் பி.டி. அன்பரசன் , ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன்,தனசேகரன் , மகேந்திரன் தேங்காய் சுப்பிரமணி, சாந்தமூர்த்தி ,ராஜேந்திரன், அறிஞர், நரசிம்மன், குண. வசந்தரசு ,எக்கூர் செல்வம், ரஜினி செல்வம், குமரேசன், பேரூர் கழக செயலாளர்கள் பாபு, தம்பிதுரை, வெங்கடப்பன் பாபு சிவகுமார் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் 26 பயனாளிகளுக்கு ரூ.25 இலட்சத்து 40 ஆயிரத்து 694 மதிப்பில் திருமண நிதி உதவிகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு , மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், வயலோகம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, நேற்று முன்தினம் (19.12.2023) வழங்கினார். உடன் முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.எம்.மஞ்சுளா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் விவேகானந்தா கல்லூரி வளாகத்தில் விவேகானந்தா கலையரங்கில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை சார்பில், மாநில அளவிலான கனவு ஆசிரியர் விருது வழங்கும் விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு 379 ஆசிரியர்களுக்கு, கனவு ஆசிரியர் விருதுகளை வழங்கினார். இந்நிகழ்வில் வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச.உமா, பள்ளிக் கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ், நாமக்கல் எம்.எல்.ஏ பெ.ராமலிங்கம், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், விவேகானந்தா கல்வி நிறுவன தலைவர் முனைவர் மு.கருணாநிதி மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இயற்கைப் பேரிடரிலிருந்து மக்களைக் காத்த முதல்வருக்கு நன்றி!

## திருவாரூர் மாவட்ட ஊராட்சிக் கூட்டத்தில் தீர்மானம்!

*திருவாரூர்,டிச. 21-*

தமிழ்நாட்டில் ஏற்பட்ட இயற்கை பேரிடர்களில் இருந்து மக்களை தாயுள்ளத்தோடு காத்துவரும் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு தலைமையிலான மாவட்ட ஊராட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

திருவாரூர் மாவட்ட ஊராட்சியின் கூட்டம் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்.

வரலாறு காணாத சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் ஏற்பட்ட பெரும் மழையால் மக்களுக்கும் அவர்தம் உடமைகளுக்கும் பாதிப்புகள் ஏற்படாத வகையில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அறிவியல் பூர்வமாக எடுத்தும், மழை பாதிப்பை உடனடியாக தீர்த்தும் வைத்து பொதுமக்களின் துயர்துடைத்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், அவரோடு துணைநின்ற அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், தன்னார்வலார்கள், கழக நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு , இன்னல்களில் இருந்து விடுபட்டு பொது மக்கள் இயல்பு வாழ்க்கையினை தொடர உடனடியாக 6000 ரூபாய் நிவாரணத்தொகையை வழங்கிய முதல்வர் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டினையும் தெரிவிப்பது,

அரசு அலுவலகங்ளுக்கு அதிகாரிகளை மக்கள் தேடிச்சென்று தங்கள் கோரிக்கைகளை வைப்பதில் ஏற்படும் சிரமங்களை தவிர்க்க அந்தந்த பகுதிகளிலேயே அதிகாரிகளே மக்களை தேடிசென்று மனுக்களை பெற்று 30 நாட்களில் அந்த கோரிக்கைகளை தீர்த்து வைக்கும் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தினை துவக்கி வைத்து மக்களின் ஏகோபித்த பாராட்டினை பெற்றிருக்கும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்ட ஊராட்சியின் சார்பில் நன்றியையும் பாராட்டினையும் தெரிவிப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் சேகர் கலியபெருமாள், செயலாளர் சந்தானம், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள், வட்டார வளர்ச்சி அதிகாரிகள், அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.



சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (19.12.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க.மணிவாசன், முதன்மை செயலாளர்/சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர்/ மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா.ஆகியோர் கலந்து கொண்டனர்.



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் இனமான பேராசிரியர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சை கலைஞர் அறிவாலயத்தில் பேராசிரியரின் திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.இராமச்சந்திரன், து.செல்வம், கே.டி.மகேஸ்கிருஷ்ணசாமி, தஞ்சை மாநகர மேயர் சண்.இராமநாதன், மாநில விவசாய அணி துணை செயலாளர் எஸ்.ஜித்து உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.